


# வேதாகமத்தை ஆராய்வது எப்படி?

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோவான் 15:1–8; மாற்கு 1:35; 1நாளா 16:11; சங் 119:105; ஏசா 50:4; ஏசா 55:1–13.

**மனன வசனம்:** அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். ஏசாயா 55:11.

ே முதன்முதலாக உங்களுக்கு எப்போது வேதாகமம் கிடைத்தது என்று யோசித்துப் பாருங்கள். ஒருவேளை, நீங்கள் சிறுவர்களாக இருக்கும்போது, உங்களுடைய கிறிஸ்தவ உறவினர் யாராவது கொடுத்திருக்கலாம். அல்லது பெரியவரான பிறகு நீங்களே வாங்கியிருக்கலாம். அந்த வேதாகமம் உங்களுக்குக் கிடைத்து, பல காலம் ஆகியிருக்கலாம், ஒன்றுக்கும் மேற்பட்ட வேதாகமம் உங்களிடம் இருக்கலாம், ஆனால் நீங்கள் அதின்மேல் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறீர்கள் என்று யோசியுங்கள். உங்களிடம் இருக்கும் தேவனுடைய ஜீவ வார்த்தை, உங்கள் கைகளில் இருக்கும் மிகவும் விலைமதிப்பற்ற பொக்கிஷங்களில் ஒன்றா? அல்லது அது உங்களிடம் இருப்பதை ஒரு சாதாரண விஷயமாக நினைக்கிறீர்களா?

அதைத் தொடர்ந்து வாசிப்பதில் நீங்கள் சிரமப்படுகிறீர்களா? 'நான் எங்கிருந்து தொடங்குவது? தேவனுக்கு நெருக்கமாக வளர இந்தப் புத்தகத்தை நான் எப்படி வாசிப்பது?' என்று எப்போதாவது யோசித்தது உண்டா?

'ஒவ்வோர் ஆண்டும் வேதாகமத்தை இரண்டு முறை முழுமையாக வாசித்து வருகிறேன், இது பல ஆண்டுகளாகத் தொடர்கிறது. வேதாகமத்தை ஒரு பெரிய, பிரமாண்டமான மரமாகவும், அதிலுள்ள வார்த்தைகள் அனைத்தையும் அதன் சிறிய கிளைகளாகவும் வைத்துக்கொண்டால், அந்த மரத்தின் ஒவ்வொரு கிளையையும் நான் தட்டிப் பார்த்திருப்பேன்; அங்கே என்ன இருக்கிறது, அது எனக்கு என்ன கொடுக்கிறது என்பதையும் அறிய நான் மிகுந்த ஆர்வத்துடன் இருந்திருப்பேன்' என்று மார்ட்டின் லூத்தர் சொன்னார். நீங்கள் தினமும் ஆர்வத்தோடு வேதாகமத்தை வாசிக்கலாம், அல்லது உங்கள் வேதாகமம் பெரும்பாலும் வாசிக்கப்படாமல் புத்தக அலமாரியிலேயே இருக்கலாம், ஆனால், நாம் அனைவரும் வேத வாசிப்பில் தேவ னோடு செலவிடுகிற நேரத்தை இன்னும் பயன்மிக்கதாக மாற்றிக்கொள்ள முடி யும். இந்த வாரம், தேவ வார்த்தையை இன்னும் சிறப்பாக ஆராய்வதற்கான சில நடைமுறை வழிகளை ஆராய்வோம்.

*2025, மே 2 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# நேரம்

காலையில் எழுந்து, வேதாகமம் வாசிப்பதற்காக வழக்கத்தைவிட சற்று முன்னரே அடிக்கும்படி அலாரம் வைத்த அனுபவமுண்டா? எப்போதாவது, படுக்கையிலிருந்து எழுந்திருக்க சோம்பல்பட்டு, பின் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, 'இன்னும் 15 நிமிடங்களுக்குள் கிளம்பவேண்டும்' என்று யோசித்து, அவசரம் அவசரமாக வேதாகமத்தை வாசித்திருக்கிறீர்களா? கடமைக்காகச் சுருக்கமாக ஜெபிப்பதும் அல்லது ஒரு அதிகாரத்தை வேகவேகமாக மேலோட்டமாக வாசிப்பதும், மனசாட்சியை அமைதிப்படுத்தலாம், ஆனால் இருதயம் திருப்தியடையாது; அப்படிப்பட்ட நிலையில் அவசரஅவசரமாக அன்றாடப் பணிகளுக்குள் நுழைந்தது உண்டா?

'வேதாகமத்தை அவசரம்அவசரமாக வாசிப்பதால் மிகச்சொற்ப நன்மையே உண்டு. ஒருவர் வேதாகமம் முழுவதையும் வாசித்தும், அதன் அழகைக் காணத் தவறவும் அல்லது அதன் ஆழமான, மறைவான அர்த்தத்தைப் புரிந்துகொள்ளத் தவறவும் வாய்ப்புள்ளது'. தீயணைப்புக் குழாயிலிருந்து வேகமாகவும், அதிகமாகவும் தண்ணீர் வரும், அதில் தண்ணீர் குடிப்பதுபோல, இவ்வாறு வேதாகமத்தை வாசிப்பதிலும் சில நன்மைகள் கிடைக்கலாம், ஆனால் ஏராளமானதைத் தவறவிட நேரிடும். நாம் தேவனைப்பற்றி இன்னும் அதிகமாக அறிந்துகொள்ளவும், அதே வேளையில், நம்மைப்பற்றியும் நாம் அதிகம் புரிந்துகொள்ளவும், தேவன் தமது ஏவுதலால் எழுதப்பட்ட விலையேறப்பெற்ற வார்த்தையை நமக்கு வழங்கினார். தேவனுடைய விவரிக்க முடியாத, அற்புதமான குணாதிசயங்களையும், வரலாறு முழுவதும் அவர் மனிதகுலத்தோடு தொடர்புகொண்ட விதங்களையும் நாம் நேரம் ஒதுக்கித் தியானிக்கும்போது, நம்மால் அவரை இன்னும் அதிகமாக நேசிக்கமட்டுமே முடியும்.

**உங்களுக்குள் தேவன்மீது ஒரு வாஞ்சையை ஏற்படுத்தும்படி அவரிடம் கேளுங்கள்.** எரே 29:13 மற்றும் சங் 37:4 இல் உள்ள வாக்குறுதிகளைச் சொந்தங்கொண்டாடி ஜெபியுங்கள். வழக்கத்தைவிட உங்களை சீக்கிரமாக எழுப்பும்படியோ அல்லது உங்கள் அன்றாடப் பணிகளுக்கு இடையே அவருக்காகச் சிறிது நேரத்தை ஒதுக்கித் தரும்படியோ அவரிடம் வேண்டுங்கள்.

**உங்கள் நேரத்தை தேவனிடம் ஒப்படையுங்கள்.** ஆம், நீங்கள் பரபரப்பாக இருப்பீர்கள், செய்யவேண்டிய அவசரமான காரியங்கள் நிறைய இருக்கும். ஆனால் தேவனோடு செலவிடும் நேரம் விலைமதிப்பற்றது. ஒரு அமைதியான இடத்திற்குச் சென்று, சங் 46:10-ஐ வாசியுங்கள். 'ஏசுவுக்கே ஒப்புவித்தேன்' என்கிற பாடலின் வரிகளை வாசியுங்கள் அல்லது தேவனிடம் அதைப் பாடுங்கள். உங்கள் வாழ்க்கையில் இன்னும் அவரிடம் ஒப்படைக்கப்படாத பகுதிகளைப் பற்றி சிந்தித்து, அவற்றை அவரிடம் அர்ப்பணியுங்கள்.

**உங்களுக்கு விருப்பம் இல்லாத நேரங்களிலும் தேவனோடு நேரத்தைச் செலவிடுங்கள்.** ஆரோக்கியத்திற்கு எப்படி ஒரு உறுதியான தீர்மானமும், உடற்பயிற்சி, சத்தான உணவு போன்ற ஒரு செயல் திட்டமும் தேவையோ, அதேபோல தேவனோடு நெருக்கமான உறவைப் பேணுவதற்கும் ஒரு உறுதியான தீர்மானம் அவசியம். புதிய பழக்கங்கள் உருவாவதற்கு குறைந்தது 21 நாட்கள் ஆகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்; மேலும், பரிசுத்த ஆவியானவரின் உதவி இல்லாமல் நம்மால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது.

---

**யோவான் 15:1-8ஐ மீண்டும் வாசியுங்கள். தம்மில் நிலைத்திருப்பதுபற்றி இயேசு என்ன சொல்கிறார், நம் விசுவாசத்திற்கு அது ஏன் மிகமுக்கியமானது?**

# குறிப்பிட்ட இடம்

**எல்லாவற்றிலும் இயேசுவே நம்முடைய பூரண முன்மாதிரி; தனிப்பட்ட தியானங்களுக்கும் அவரேதான் முன்மாதிரி. இயேசு தம் பிதாவுடன் நேரம் செலவிட்டதுபற்றி மாற்கு 1:35 என்ன சொல்கிறது?**

மாற்கு 1:35 ஒரு வசனம்தான்; ஆனால் இயேசுவின் அந்த முன்மாதிரியிலிருந்து நாம் அதிகம் கற்றுக்கொள்ளலாம். அவர் தம் பிதாவுடன் இருக்கும்படிக்கு, சூரியன் உதிப்பதற்கு முன்னரே எழுந்து, அமைதியான ஓர் இடத்திற்குச் சென்றார். சுற்றிலும் மக்கள் விழித்துக்கொள்வதற்கு முன்னரே, இயேசு கலிலேயக் கடலோரத்திலோ அல்லது ஒரு மலையோரத்திலோ அமர்ந்து, தமது பிதாவோடு ஜெபிப்பதையும் அவரோடு பேசுவதையும் உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? ஜெபத்தில் இயேசுவுக்கிருந்த அர்ப்பணிப்பை இந்த வசனம் விவரித்தாலும், ஜெபத்திற்கு அவர் முதன்மையான இடத்தைக் கொடுத்ததை நாம் தெளிவாகக் காண்கிறோம். அவர் எதிர்கொண்ட அனைத்தையும் சகிப்பதற்கான வலிமையை இந்த நேரமே அவருக்கு வழங்கியது என்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு நாளையும் தொடங்குவதற்கு இயேசுவுக்கே இது தேவைப்பட்டது என்றால், நமக்கு இது இன்னும் எவ்வளவு அதிகமாகத் தேவைப்படும்? 'என் முகத்தைத் தேடுங்கள்' என்று தேவன் நம்மிடம் சொல்கிறார்; 'உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே' என்று நாம் சொல்வதற்கு அவர் எதிர்பார்க்கிறார். சங் 27:8.

**நாம் அவருடைய முகத்தைத் தேடவேண்டிய விதம்பற்றி 1நாளா 16:11 என்ன சொல்கிறது?**

ஒவ்வொரு நாள் காலையிலும் நீங்கள் தேவனோடு நேரம் செலவிட ஒரு தனி இடம் வைத்திருக்கிறீர்களா? ஒருவேளை ஜன்னலுக்கு அருகில் உள்ள ஒரு நாற்காலி, வெளியே ஒரு அமைதியான இடம் அல்லது உங்கள் சமையலறை மேஜை என எதுவாகவும் இருக்கலாம்; அங்கே நீங்கள் தினமும் வந்து, இயேசுவின் பாதத்தில் அமர்ந்து தேவனுடைய வார்த்தையிலிருந்து கற்றுக்கொள்ளலாம். இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருப்பதே மிகச்சிறந்த இடமாகும். லூக் 10:39-42. தேவனோடு நேரத்தைச் செலவிட ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லும் பழக்கத்தைத் தினமும் கடைப்பிடிப்பதன்மூலம், நீங்கள் ஒவ்வொரு நாளும் அங்கேயே மீண்டும் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகம். எப்போதாவது ஒருநாள் உங்களால் இதைச் செய்யமுடியாமல் போனால் சோர்வடைய வேண்டாம், ஏனென்றால் எதிர்பாராத அவசர வேலைகள் வரலாம். ஆனால், தேவனோடு நேரத்தைச் செலவிடாமல் அதிக நாட்கள் கடந்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். தேவனோடு நிலைத்திருக்கிற ஒரு உறவைப் பேண தினமும் தீர்மானிக்கவேண்டும்; நீங்கள் விரும்பினால், அதை இன்றும், இப்போதே மீண்டும் தொடங்கலாம்.

---

**கடந்த வாரத்தில், நீங்கள் ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் எவ்வளவு நேரத்தைச் செலவிட்டீர்கள்? உங்கள் பதில், உங்கள் முன்னுரிமைகளில் நீங்கள் செய்யவேண்டிய மாற்றங்களைப் பற்றி உங்களுக்கு என்ன சொல்கிறது?**

# ஆழமான வேத ஆராய்ச்சி

நீங்கள் ஒரு வேத அறிஞராக இல்லாவிட்டாலும் வேதாகமத்தை எவ்வாறு ஆழமாகத் தியானிக்கமுடியும்?

**ஜெபியுங்கள்:** உங்கள் வேத ஆராய்ச்சியின் துவக்கத்திலும் முடிவிலும், இடை இடையேயும் ஜெபிக்கவேண்டியது மிகமிக முக்கியம். வேதாகமத்தை ஆராய ஆரம்பிக்கும்போது நாம் தனியாக இருக்கமாட்டோம் என்று எலன் ஒய்ட் சொல்கிறார். பரிசுத்த ஆவியானவரை நம் வழிகாட்டியாக அழைக்கும்போது, மற்ற அனைத்துக் கவனச்சிதறல்களையும் புறக்கணிக்கிறோம், சத்துரு ஓடிப் போகிறான். 'ஜெபிக்காமல் வேதாகமத்தை ஆராயவே கூடாது. எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய காரியங்களின் முக்கியத்துவத்தை நாம் உணரும்படி செய்ய வும், அல்லது கடினமான சத்தியங்களை நாம் தவறாகப் புரிந்து கொள்ளாதபடி நம்மைப் பாதுகாக்கவும் பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே முடியும்.'

**வாசியுங்கள், எழுதுங்கள்:** வேதாகமத்தை சாதாரணமாக வாசிப்பதற்கும், அதை ஆழமாகப் தியானிப்பதற்கும் இடையேயான முக்கிய வித்தியாசம் ஒரு செயலில்தான் அடங்கியிருக்கிறது: அது எழுதுதல். எழுதுவது நமது எண்ணங் களின் வேகத்தைக் குறைக்கவும், தேவனுடைய வார்த்தையைத் தியானிக்கவும், கூர்ந்த கவனிப்பு, அர்த்தம் அறிதல், வாழ்க்கை பயன்பாடு மற்றும் அர்ப்பணிப்பு ஆகிய நிலைகளை பயன்தரும் வேகத்தில் கடந்துசெல்லவும் உதவுகிறது. இது ஆரம்பத்தில் நமக்குள்ளாக ஆங்காங்கே எழுந்த கருத்துகளை ஒருங்கிணைத்து, நம் எண்ணங்களிலிருந்து பேனாவுக்கும், அங்கிருந்து அந்த நாளில் நாம் புரிந்து கொள்ள வேண்டியதை நம் இருதயத்திற்கும் கடத்த உதவுகிறது. மேலும், நாம் எழுதிப்பார்ப்பவற்றை ஞாபகத்தில் வைத்திருக்க அதிக வாய்ப்புள்ளது. சங் 119:15,16. உங்கள் எண்ணங்களை உங்களால் எழுத இயலாவிட்டால், வேதாக மத்தைச் சத்தமாக வாசிக்கலாம் அல்லது வாசிக்கப்படுவதைக் கேட்கலாம், பிறகு உங்களுக்குள் வரும் எண்ணங்களை, தேவனிடம் சொல்லி ஜெபிக்கலாம்.

**பகிருங்கள்:** நீங்கள் கற்றதை யாராவது ஒருவரிடம் சொல்லுங்கள். அப்போது அந்த விஷயம் உங்கள் மனதில் ஆழமாகப் பதியும், நீங்கள் யாரிடம் சொல் கிறீர்களோ அவரை உற்சாகப்படுத்தும்.

யோனா, மாற்கு, பிலிப்பியர் அல்லது 1 யோவான் போன்ற வேதாகமத்தின் சிறிய புத்தகம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துத் தொடங்குங்கள். ஒரு வசனத்தையோ (வசனம்-வசனமாக ஆராயும் முறை), ஒரு குறிப்பிட்ட பகுதியையோ, அல்லது ஒரு முழு அதிகாரத்தையோ ஆராய்வதற்கு எளிய அணுகுமுறை இதோ:

1. பரிசுத்த ஆவியானவர் சிந்தையை வழிநடத்தவும், இதயத்தை மிருதுவாக்கவும் ஜெபியுங்கள்.
2. ஒரு வசனத்தை அல்லது வேதப்பகுதியைத் தேர்வுசெய்யுங்கள்.
3. கவனத்தை ஈர்க்கும் அந்த வேதப்பகுதியை அல்லது குறிப்பிட்ட வசனங்களை எழுதுங்கள்.
4. அந்த வேதப்பகுதியை ஜெபத்துடன் வாசித்து, முக்கியக் கருத்துகளை அடிக்கோடிடுங்கள்.
5. அடிக்கோடிட்ட கருத்துகள் வலியுறுத்துகிற செய்தியை எழுதுங்கள்.
6. அந்தக் கருத்துக்களைக் குறித்து ஜெபியுங்கள், மேலும் அவை தேவனோடு உங்களுக்கிருக்கும் உறவை எவ்வாறு வலுப்படுத்துகின்றன என்பதைச் சிந்தியுங்கள்.
7. நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்கள் யாருடன் பகிரலாம் என்று சிந்தித்துப் பாருங்கள்.

'தேவ மக்கள் கிருபையில் வளரும்போதெல்லாம், அவரது வார்த்தை குறித்த தெளிவான புரிதலைப் பெற்றுக்கொண்டே இருப்பார்கள்.'

**இது உங்கள் வாழ்க்கையில் எந்த வழிகளில் உண்மையாக அமைந்திருக்கிறது? சங் 119:105.**

# இரட்டிப்பான ஆசீர்வாதம்

வேதாகமத்தை நாம் பல முறைகளில் ஆராயலாம்; ஏற்கனவே குறிப்பிட்ட வசனம்-வசனமாக ஆராயும் முறை, ஒரு முழு அதிகாரத்தை ஆராய்தல், ஒரு குறிப்பிட்ட கருப்பொருளை ஆராய்தல், ஒரு குறிப்பிட்ட வார்த்தையை ஆராய்தல் அல்லது ஒரு முழு புத்தகத்தை ஆராய்தல் போன்றவை இதில் அடங்கும். ஒரு வேத அகராதி மற்றும் ஒத்தவாக்கிய அகராதியைப் பயன்படுத்தி ஆராயலாம். மேலும் கூடுதல் புரிதலுக்காக 'யுகங்களின் போராட்டம்' புத்தகத் தொடரோடு சேர்த்தும் வேதாகமத்தை வாசிக்கலாம். வெளியே இயற்கையில் உலாவிக்கொண்டே வேதாகம ஒலிப்பதிவைக் கேட்கலாம், அல்லது ஒரு நண்பருடனோ ஒரு சிறிய குழுவாகவோ இணைந்தும் வாசிக்கலாம்.

நமது நட்புறவை உயிர்ப்புடன் வைத்திருக்க நாம் எப்படிப் பல்வேறு செயல்களையும் புதிய முயற்சிகளையும் மேற்கொள்கிறோமோ, அதேபோல வேதாகமத்தை ஆராய்வதற்கு வெவ்வேறு முறைகளைக் கையாள்வதன்மூலம் தேவனோடு நாம் தினமும் செலவிடும் நேரத்தைப் புத்துணர்ச்சியுடனும் ஆக்கப் பூர்வமாகவும் வைத்திருக்கவேண்டும்!

நாம் கற்றதை மற்றவர்களுக்கு விளக்கும்போது, செய்தியைச் சுருக்கி, தொகுக்குச் சொல்கிற செயல்முறை நமது எண்ணங்களை உறுதிப்படுத்துகிறது. அது நாம் கற்றவற்றை நினைவில் நிறுத்த உதவுகிறது. இதன் இரட்டிப்பு ஆசீர்வாதம் என்னவென்றால், நாம் மற்றவர்களுடன் கலந்துரையாடும்போது, அந்த ஆவிக்குரிய உரையாடல் இருவருக்குமே அறைகூவல் விடுத்து, விசுவாசத்தில் பலப்படுத்துகிறது. பெரும்பாலும் மற்றவர்களுடன் பகிரும்போது அல்லது அவர்களுக்குப் போதிக்கும்போதுதான் நமக்குள் மிக ஆழமான கற்றல் நிகழ்கிறது.

ஒவ்வொரு நாளும் நாம் தியானிப்பது நமக்கான தேவனுடைய செய்தி மட்டுமல்ல, அது மற்றவர்களுக்கான ஒரு செய்தியும்கூட என்பதை உணரலாம்.

**தேவனுடன் உறவு வைத்திருப்பதைப்பற்றியும், அது மற்றவர்களுடனான நமது உறவில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப்பற்றியும் ஏசாயா 50:4 நமக்கு என்ன சொல்கிறது?**

நம் தனிப்பட்ட வேத ஆராய்ச்சி நேரம் நம்மைப் பெலப்படுத்துவது மட்டுமல்லாமல், அன்றைய தினம் நாம் சந்திப்பவர்களை ஊக்குவிக்கவும் பெலனளிக்கிறது. அது ஓர் இரட்டிப்பு ஆசீர்வாதமாக மாறமுடியும்.

நம் ஆவிக்குரிய வாழ்க்கை ஒரு மாரத்தான் ஓட்டம் போன்றது. உங்கள் ஓட்டத்தை விடாமுயற்சியுடன் தொடரவும், உங்கள் கண்களை இலக்கின் மீதே நிலைநிறுத்தி ஓடவும் ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள். பிலி 3:14. பின்தங்கும்போது மனம் சோர்ந்து போகாதீர்கள்; ஆனால் உறவை, குறிப்பாக உங்கள் வேதஆராய்ச்சி மற்றும் ஜெப நேரத்தை மீண்டும் புத்துணர்ச்சியுடனும் மாற்ற தேவையான மாற்றங்களைச் செய்யுங்கள். இன்று நாம் தேவனை அறிந்துகொள்வதே நித்திய ஜீவன். யோவான் 17:3. அவரிலும் அவருடைய வார்த்தையிலும் நிலைத்திருக்க நாம் எடுக்கும் தீர்மானம் நமது வாழ்க்கையை மாற்றக்கூடியது.

---

**இந்த வார மனப்பாட வசனத்தை வாசித்து, அதன் அர்த்தம்பற்றி தியானியுங்கள். தற்சமயம் எதை ஆராய்ந்து கொண்டிருக்கிறீர்கள்? அதை யாருடன் நீங்கள் பகிர்ந்துகொள்ளலாம்?**

# எவ்வளவு இனிமை!

உங்களுக்குப் பிடித்த இனிப்பு வகை உங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லதா? ஒருவேளை நீங்கள் இனிப்பிற்காகத் தேனைப் பயன்படுத்தலாம், அல்லது ‘மணுகா’ தேனை அதன் மருத்துவக் குணங்களுக்காகப் பயன்படுத்தலாம். நீங்கள் எப்போதாவது தேன்கூட்டைச் சுவைத்திருந்தால், அதன் மென்மையான அமைப்பு நாவில் கரையும்போது இனிமையாக இருக்கும்.

சங்கீதக்காரன் வேதாகமத்தை ஒரு தேன்கூட்டிற்கு ஒப்பிடுகிறார். சங் 119:103,104. இது மகிழ்ச்சியைச் சுட்டிக்காட்டுகிற ஓர் உருவகம். ‘உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்.’

**‘உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன்’ என்பதின் அர்த்தம் என்ன? சங் 119:104. வேத ஆராய்ச்சியால் என்ன பயனிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு இந்தக் கருத்து ஏன் முக்கியமானது?**

ஆம், தேவனுடைய வார்த்தைகள் நிச்சயமாக நமது ஆத்துமாவிற்கு இனிமையானவை; மேலும் இந்த உலகம் தரக்கூடிய எதற்கும் அவை இணையானவை அல்ல. பல இனிப்பு வகைகளைப் போலல்லாமல், தேவனுடைய வார்த்தையின் இனிமை நமது ஆத்துமாவிற்கு சுகமளிப்பதாகவும், நமது குணத்தையே மாற்றியமைக்கக்கூடியதாகவும் இருக்கிறது. நீங்கள் தேவனை விட்டு சற்று விலகி இருந்திருந்தால், இப்போது முழங்காலிலிருந்து அவருடைய வார்த்தையைத் திறவுங்கள்; உங்கள் தாகத்தைத் தீர்க்கக்கூடிய அந்த ‘ஜீவத் தண்ணீரைப்’ல பருகுங்கள்; அது மட்டுமே உங்கள் ஆத்துமாவைத் திருப்திப்படுத்தும்.

**ஏசா 55:1– 13 வசனங்களில், தீர்க்கதரிசி மேலே குறிப்பிட்ட செய்தியை விரிவாக விளக்குகிறார். இந்த அதிகாரத்தை வாசித்துவிட்டு, இந்தக் கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்:**

**தம் வார்த்தையிலிருந்து ‘சாப்பிட’ வருகிறவர்களுக்கு தேவன் என்ன கொடுக்கிறார்?**

**இங்கு அவர் உங்களுக்குக் கொடுக்கிற அழைப்பு என்ன?**

**அவர் முன்வைக்கிற சவால் என்ன?**

**அவர் கொடுக்கிற வாக்குறுதி என்ன?**

ஜீவனும் வல்லமையும் உள்ள தேவனுடைய வார்த்தை, நம் இருதயங்களையும் சிந்தைகளையும் ஆத்துமாக்களையும் ஊடுருவிச் சென்று, கிறிஸ்துவுக்குள் நாம் வளர அறைகூவல் விடுக்கிறது. ஆனால், நாம் எந்த அளவிற்கு நேரத்தையும் முயற்சியையும் (ஆம், இதற்கு முயற்சி தேவை) ஒதுக்கி, கீழ்ப்படிதலோடும் தாழ்மை மனப்பான்மையோடும், வேதாகமம் கற்பிப்பதைப் பின்பற்றுகிற விருப்பத்தோடும் வேதாகமத்தை ஆழமாகத் தியானிக்கிறோமோ, அந்த அளவிற்குமட்டுமே அது நமக்காக இதனைச் செய்யமுடியும்.

---

**உறுதியான எந்தெந்த வழிகளில் ‘கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத்’ தேட முடியும்?**

# மேலும் படிக்க:

வேதாகம ஆராய்ச்சியின் நோக்கம் தேவனை அறிந்துகொள்வதும், அவரோடு உறவில் வளருவதுமே ஆகும்; ஏனெனில், நாம் நேசிக்கிற தேவனோடு என்றென்றும் இணைந்திருப்பதே நித்திய ஜீவன் ஆகும். யோவான் 5:39; 17:3.

எந்தவொரு உறவிலும் இருதரப்பு ஈடுபாடு இருக்கும். இயேசு நம்மோடு அத்தகைய உறவைக் கொண்டிருக்க விரும்புகிறார். வெளி 3:20. ஆனாலும், படைக்கப்பட்ட உயிரினங்களாகிய நாம், நமது சிருஷ்டிகரைப்பற்றி எப்போதும் அதிகமாகக் கற்றுக்கொள்ள முடியும் என்பதை உணரவேண்டும். விலையுயர்ந்த ரத்தினங்களைத் தேடித் தோண்டும் ஒரு சுரங்கத் தொழிலாளியைப்போல, நாமும் வேதாகமத்தில் இடைவிடாமல் தேடிக்கொண்டே இருக்க வேண்டும். நாம் சில குறிப்பிட்ட சம்பவங்களையோ அல்லது வேதப்பகுதிகளையோ எத்தனை முறை வாசித்திருந்தாலும், அவற்றிலிருந்து கற்றுக்கொள்வதற்கு எப்போதும் இன்னும் அதிகமான விஷயங்கள் இருக்கவே செய்கின்றன. 'மனிதன் எவ்வளவு தூரம் அறிவுத்திறனில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், மேலான வெளிச்சத்திற்காக ஆழமாகவும் தொடர்ச்சியாகவும் ஆராயவேண்டிய அவசியம் இல்லை என்று அவன் ஒருபோதும் நினைக்கக்கூடாது. நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் தீர்க்கதரிசனங்களை ஆராயும் மாணவர்களாக இருக்க அழைக்கப்படுகிறோம்'.

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *நீங்கள் எப்படிப்பட்ட மனநிலையுடன் வேதாகமத்தை ஆராய்கிறீர்கள்? ஏதாவது மாற்றம் தேவைப்படுகிறதா? தாழ்மையும் அர்ப்பணிப்புமுள்ள மனநிலையுடன் வேதாகமத்தைத் தியானிப்பது ஏன் முக்கியம்?*

2 *வேதாகமம் தன்னைப்பற்றி உங்களிடம் பேசுவதற்கு வசதியாக, நீங்கள் ஒதுக்கி வைக்கவேண்டிய ஏதேனும் முன்அபிப்பிராயக் கருத்துக்கள் உங்களிடம் உள்ளனவா? அப்படியிருந்தால், அவற்றைக் களைவதற்கு இப்போதே ஜெபிக்கத் தொடங்குவீர்களா?*

3 *ஒருவர் தனது சுயநலத்திற்காகப் புதிய மற்றும் விந்தையான காரியங்களைக் கண்டு பிடிக்க விரும்பினால், அது தேவனோடுள்ள அவரது உறவில் எப்படி ஒரு தடைக் கல்லாக மாறும்? அதாவது, புதுமைக்கான ஆசை ஒருவரை எவ்வாறு நல்வழியிலிருந்து விலகிச்செல்ல வைக்கும்?*

**பாடச்சுருக்கம்:** தேவனுடன் உயிரோட்டமான, நிலைத்து நிற்கிற உறவுக்குத் தனிப்பட்ட வேத ஆராய்ச்சி மையமாக இருக்கிறது. கடந்த காலங்களில் இருந்ததைப் போலவே, இன்றும் இருபத்தியோராம் நூற்றாண்டு வாழ்க்கையிலும் தேவனுடைய வார்த்தை அர்த்தமுள்ள வழிகளில் நம்மோடு பேசுகிறது. எந்தவொரு நட்பையும் உயிர்ப்புடன் வைத்திருப்பதைப் போலவே, நாம் இயேசுவில் நிலைத்திருக்கும்போது நமது பக்திவாழ்க்கையையும் உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கான வழிகளைத் தேடவேண்டும். அவருடைய வார்த்தை 'வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்' என்கிற அவருடைய வாக்குத்தத்தத்தை நாம் முழுமையாக நம்பவேண்டும்.

# ஓய்வுநாளை அறிந்துகொள்ள உதவின பசுக்கள்

கென்யாவில் ஒரு அப்பா, ஒன்பது அம்மாக்கள் உடைய மசாய் பழங்குடின இனத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் பிறந்தார் ரோம்பாஸ். அவருடன் பிறந்தவர்கள் 82 பேர். அவர் 62–வது குழந்தை. அவருக்கு 13 வயது இருக்கும்போது, தனது தந்தையின் கால்நடைகளை காட்டில் மேய்த்துக் கொண்டிருந்தார். அப்போது அந்த விலங்குகள் ஒரு குறிப்பிட்ட திசையில் தாமாகவே செல்வதைக் கவனித்தார். அந்தக் கால்நடைகளைப் பின்தொடர்ந்து சென்ற போது, அமெரிக்காவிலிருந்து வந்திருந்த ஒரு ஊழியப்பணியாளர் திறந்த வெளியில் கூட் டங்கள் நடத்திக் கொண்டிருந்ததைக் கண்டார்.

ரோம்பாஸ் ஆர்வமடைந்தார். அவர் பள்ளிக்குச் சென்றதில்லை என்பதால், அவரால் வேதாகமத்தை வாசிக்க முடியவில்லை. ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் வானொலியில் வரும் பிரசங்கங்களைக் கேட்க அவருக்குப் பிடிக்கும். கேட்டவற்றை மனப்பாடம் செய்து, அந்த பிரசங்கங்களைத் தனது குடும்பத்தினரிடம் ரசனையோடு சொல்வார். பிரசங்கம் செய்வதில் அவருக்கு இருந்த ஆர்வத்தால், அவருக்கு ‘போதகர்’ என்ற செல்லப்பெயர் கிடைத்தது. ஆனால் அந்த ஊழியப்பணியாளர், ரோம்பாஸ் இதுவரை கேள்விப்படாத ஒரு செய்தியைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். ஞாயிற்றுக்கிழமை அல்ல, சனிக்கிழமையே தேவனுடைய பரிசுத்தமான நாள் என்று வேதாகமம் சொல்வதாகக் கூறினார்.

ரோம்பாஸ் ஓடிச்சென்று தனக்குத் தெரிந்த எழுதப்படிக்கத் தெரிந்த ஒரு நண்பனைத் தேடிப்பிடித்தார். அந்தப் பிரசங்கத்தில் சொல்லப்பட்ட வேதாகம வசனங்களை எழுதித் தரு மாறு அவனிடம் கேட்டார். அந்தச் சிறுவன் ஏழாம் நாள் ஓய்வுநாளின் பரிசுத்ததன்மை பற்றிய 33 வசனங்களை எழுதிக் கொடுத்தான். அன்று மாலை, சுமார் நான்கு மைல்கள் நடந்து ஒரு போதகரின் வீட்டிற்குச் சென்று, அவரிடம் அந்த 33 வசனங்கள் அடங்கிய பட்டியலைக் கொடுத்தார். “நமது வேதாகமத்திலும் இந்த வசனங்கள் இருக்கின்றனவா?” என்று கேட்டார். அந்தப் போதகர் தனது வேதாகமத்தில் அந்த வசனங்களைச் சரிபார்த்துவிட்டு, அச்சமூட்டுகிற தொனியில், “நீ பிசாசை வணங்குபவர்களின் கூட்டத்திற்குச் சென்றிருக் கிறாய்” என்று கூறினார்.

ரோம்பாஸை பயம் ஆட்கொண்டது. நடுங்க ஆரம்பித்தார். “ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்” என்று வேண்டினார். அந்தப் போதகர் சிறுவனின் கன்னங்களில் தனது வேதா கமத்தால் மீண்டும் மீண்டும் அடித்தார். “இயேசுவின் பெயரால், இந்தச் சிறுவனைப் பிடித் துள்ள பிசாசை நான் அதட்டுகிறேன்” என்று சொன்னார்.

ரோம்பாஸ் வீட்டிற்குத் திரும்ப வெகுநேரமாகிவிட்டது. உறங்கிய பிறகு, அவருக்கு ஒரு கனவு வந்தது. அதில் அந்த ஊழியர் மீண்டும் ஓய்வுநாளைப் பற்றிப் பிரசங்கிப்பதைக் கண்டார். தூக்கத்திலிருந்து விழித்த அவர், தனக்குள் பிசாசு புகுந்து விட்டதோ என்று அஞ்சி, பிசாசை அதட்டினார்.



அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு, ரோம்பாஸிற்கு ஒவ்வொரு இரவும் அதே கனவு வந்தது. பிறகு அவர், ‘ஒருவேளை இது ஆண்டவரி டமிருந்து வந்த செய்தியாக இருக்குமோ? அந்தப் போதகர் சொன்னது உண்மைதானா என்று நானே கண்டறிய வேண்டும்’ என்று நினைத்தார்.

அதனுடன், அந்தச் சிறுவன், ஒரு செவந்–டே அட்வென்டிஸ்ட் போதகராவதற்கான தனது முதல் அடியை எடுத்து வைத்தார்.